بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் – அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

### பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் *06.03.2015* அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

**Summary of the Friday Sermon - 6 March 2015 (Tamil)**

இவை சூரா ஹஷ்ர் உடைய இரு வசனங்கள். அதன் மொழியாக்கம் இதுவாகும். *நம்பிக்கை கொண்டவர்களே! இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். ஒவ்வொரு ஆன்மாவும் தனக்காக நாளைக்கென என்ன அனுப்பியுள்ளன என்று பார்க்கட்டும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதை நன்கறிகின்றான். மேலும் அல்லாஹ்வை மறந்தவர்களைப் போன்று ஆகி விட வேண்டாம். அல்லாஹ் அவர்களை தம்மைத் தாமே மறந்து போகச் செய்து விட்டான். இவர்களே தீயவர்கள்.*

ஒவ்வொரு தீமை மற்றும் பாவத்தின் வேர் அந்த பாவங்களை சாதாரணமானவையாகக் கருதி அவற்றிலிருந்து விலக முயற்சி செய்யாமையாகும். இதுவே பொதுவாகக் காணப்படுகிறது அல்லது அவற்றைப் பற்றி கவனம் செலுத்தாமல் இருப்பதாகும். இந்த எச்சரிக்கையின்மைதான் மனிதன் பெரும் பாவங்களில் பீடிக்கச் செய்கிறது. பிறகு மனிதன் சிறிது சிறிதாக நன்மைகளை மறந்து விடுகின்றான். ஒரு நம்பிக்கையாளர் பெற வேண்டிய நன்மைகளின் உயர் தரத்தை மறந்து விடுகிறான். அல்லாஹ்வைப் பற்றிய பயம் குறைந்து போகிறது.

அல்லாஹ் நம்பிக்கையாளர்களிடம் மிகவும் அழுத்தமாகக் கூறுகிறான். இன்றைக்காகவும் இவ்வுலகிற்காகவும் உலக சுகபோகங்களிலும் சொகுசுகளிலும் அல்லது உறவினர்கள், நண்பர்களின் தொடர்புகள் ஆகியவற்றிற்காக மட்டும் கவலைப்படாதீர்கள். கவலைப்பட வேண்டிய விஷயமோ உங்களது நாளை ஆகும். உங்களுடைய அல்லாஹ்வின் மீதான ஈமானின் தரம், அவனுக்காக தக்வாவை மேற்கொள்வது ஆகியவை உங்களது முன்னுரிமை பெற்றவையாக இருக்க வேண்டும். உங்களது மரணத்திற்குப் பிறகுள்ள வாழ்க்கை, உங்கள் கணக்கெடுப்பு குறித்த ஈமான் ஆகியவை உங்கள் கவலையின் மையப் பகுதியாக இருக்க வேண்டும். அது இருந்தால் அப்போது உங்கள் நல்லொழுக்க முன்னேற்றம் ஏற்படும். அது வெறும் மேலோட்டமான நல்லொழுக்கமாக இருக்காது. மாறாக அல்லாஹ்வுடைய திருப்தியைப் பெறுவதை இலட்சியம் கொண்டதாக இருக்கும். உங்கள் ஆன்மீக முன்னேற்றம், நான் நம்பிக்கையாளனாவேன் என்ற உங்கள் வாதம் ஆகியவை நாளையின் மீது உங்கள் கவனம் இருக்கும்போது தான் உண்மையாகும். உங்களது உறுதியான சுயநலமற்ற, உண்மையை அடிப்படையாகக் கொண்ட இறை இருப்பின் மீதான நம்பிக்கை ஆகியவை நாளையை முன்னிறுத்தி அல்லாஹ்வின் திருப்தியைப் பெற முயற்சி செய்யும் போதுதான் உண்மையாக இருக்கும்.

எனவே அல்லாஹ்வுடைய இந்த கட்டளையை நம்மில் ஒவ்வொருவரும் மிகவும் முயன்று புரிவது அவசிமாகும். அல்லாஹ்வுடைய அச்சத்தை மேற்கொண்டவாறு நாம் நமது செயல்களை கவனித்து வர வேண்டும். நமது நாளையை சீர்படுத்தும் விஷயங்களைக் கவனிக்க வேண்டும். அல்லாஹ் நமது உள்ளத்தின் ஆழம் வரை பார்க்கக் கூடியவன். அவனுக்கு நம்மைப் பற்றிய அனைத்தும் தெரியும். மேலோட்டமான காரியங்களைக் கொண்டு அவனை ஏமாற்ற இயலாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறியது போன்று செல்லாத காரியங்களை அவன் பிரித்து விடுவான். செல்லாத நற்செயல்களை ஏற்கமாட்டான். ஆகவே ஒரு நம்பிக்கையாளருக்கு இது மிகவும் கவலை கொள்ளத்தக்க இடமாகும். அவர் தனது நாளையைக் குறித்து கவலைப்பட வேண்டும், அங்கு நமது செயல்கள் கணக்கெடுக்கப்படவுள்ளன. நம்பிக்கை இல்லாதவர் போன்று நாம் இவ்வுலகையே எல்லாம் என்று இருந்து விடக் கூடாது. மாறாக, உண்மையான வெற்றியை பெறுவதற்காக தக்வாவின்படி நடக்க வேண்டும்.

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் கூறுகின்றார்கள்: இம்மை மற்றும் மறுமையின் வெற்றிக்கான ஒரு இரகசியத்தை அல்லாஹ் கூறுகிறான். அது, மனிதன் நாளையைப் பற்றி இன்று கவலைப்பட வேண்டும் என்பதாகும். அது கொண்டு உலகமும் சரியாகும். மறுவுலக வாழ்க்கையும் சரியாகும். பரிசுத்த குர்ஆனின் போதனையான வல் தன்ளுரு நஃஸின் மா கத்தமது லிகத் – ன்படி செயல்படுவதன் மூலம் மனிதன் உலகில் வெற்றி பெறுவது மட்டுமின்றி மறுவுலகிலும் இறையருளால் வெற்றி பெறுகிறார். இன்றிலிருந்தே அந்த உறுதியான வீட்டிற்காக ஆயத்தங்களை தொடங்காத வரை நாம் ஒருபோதும் மறுவுலகின் வாழ்விற்காக சாதனங்களைப் பெற இயலாது.

இந்த சான்றுகளிலிருந்து நான் கூற விரும்புவதாவது, இந்த வசனத்தை நாம் நிகாஹ் குத்பாவிலும் ஓதுகிறோம். இது நிகாஹ் குத்பாவில் ஓதப்படுகிற வசனங்களுள் கடைசியாகும். அல்லாஹ் நிகாஹ் குத்பாவில் ஓதப்படுகிற வசனங்களில் பல்வேறு விஷயங்களின் பக்கம் கவனமூட்டியவாறு, உங்கள் கருப்பை தொடர்பான உறவுகளை கவனத்தில் கொள்ளுங்கள் என்றும் இந்த சம்பந்தத்தின் மூலம் உங்களுக்கு ஏற்படவுள்ள பொறுப்புகளையும் கவனம் வையுங்கள். உண்மையை கடைபிடியுங்கள். அதன் மூலம் நன்மைகளைப் பேணவும் உறவுகளைப் பேணவும் உண்மையை கடைபிடிக்கவும் வாய்ப்பு ஏற்படும் என்று கூறுகிறான். அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் கட்டளைகளின்படி நடங்கள். அதில் தான் உங்கள் வெற்றிக்குரிய வாழ்வு இருக்கிறது.

அந்த வீடு – அந்த குடும்பம் சின்ன விஷயங்களுக்காக தமது வீடுகளை அழித்துக் கொண்டிருப்போர் அல்லாஹ்வுடைய கட்டளைகளின் மீது ஆய்வு செய்வோராகவும் அதனை செயல்படுத்துபவராகவும் ஆகி விட்டால் அவர்களின் வீட்டின் நிம்மதிக்கு உத்திரவாதம் கிடைப்பது மட்டுமின்றி அவர் தம் குழந்தைகளுக்கு சரியான பயிற்சி மற்றும் அவர்களை தக்வாவில் நடக்க வழிகாட்டுபவர்களாகவும் ஆகி விடுவர். அவர்களின் வாழ்வை சீர்படுத்துபவர்களாகி விடுவர். இன்னும் சொல்வதாயின், இவ்வுலகிலும் மறுவுலகிலும் இறைவனின் வெகுமதிகளைப் பெறுபவர்களாகி விடுவர். ஆகவே சின்னச்சின்ன விஷயங்களுக்காக உலகக் காரியங்களுக்காக தமது வீட்டை அழித்துக் கொண்டிருப்போர் சிந்திக்க வேண்டும். வருங்கால சந்ததிகள் உங்கள் குழந்தைகள் மட்டுமல்ல. மாறாக, ஜமாஅத் மற்றும் நாட்டின் சொத்துக்கள் ஆவர். அவர்களுக்கு சரியான வழியைக் காட்டுவது பெற்றோரின் கடமையாகும். பெற்றோர் தம்மைத் தாமே அல்லாஹ் ரஸூலின் கட்டளைக்கேற்ப நடக்க முயற்சிக்கும்போதுதான் இது நடக்க முடியும். அல்லாஹ் நம் அனைவருக்கும் அதற்கான வாய்ப்பினை வழங்குவானாக!

நமது வாழ்வில் எண்ணற்ற சந்தர்ப்பங்கள் உள்ளன. நாம் அதில் தக்வாவை மேற்கொள்ளாமல் இருந்து விடுகிறோம். மறுமையை கவனிப்பதில்லை. உலக வசதிவாய்ப்புகள், தேவைகள் ஆகியவற்றையே எல்லாம் என்று கருதி விடுகிறோம். உலகின் ஆதரவுக்கு அல்லாஹ்வின் ஆதரவை விட நம்மை அறியாமல் முதன்மை தந்து விடுகிறோம். பிறகு நமது பலவீனத்தின் காரணமாக, அசட்டையின் காரணமாக, சோம்பலின் காரணமாக இவ்வுலகிலும் எதிர்காலத்தை அழித்துக் கொள்கிறோம். மறு உலகின் நாளையும் அலட்சியம் செய்து விடுகிறோம். இதனால் எத்துணை பயங்கரமான விளைவு ஏற்படும் என்று சிந்திப்பதில்லை.

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் ஒருமுறை சுருக்கமான சொற்களில் இவ்வாறு கவனமூட்டினார்கள். ஒரு மூஃமின் ஒரு வேலையை செய்வதாயின் அதன் இறுதி முடிவை முதலில் சிந்திக்க வேண்டும். அதன் முடிவு என்னவாகும் என்று சிந்திக்க வேண்டும்.

கூறுகின்றார்கள்: மனிதன் கோபத்தின் வேளையில் கொன்று விட நினைக்கிறான்; ஏசுகிறான். ஆனால் அதன் விளைவு என்னவாகும் என்று சிந்தித்தால், தக்வாவின் பக்கம் அடியெடுத்து வைக்க வாய்ப்பு கிடைக்கும். எல்லா தீமைகளும், பாவங்களும் நம்மிடமிருந்து வெளிப்படக் காரணம் என்னவென்று பார்த்தால் அவற்றை செய்யும்போது நமது மூளையில் ஷய்த்தான் புகுந்து விடுகிறான் என்பதுதான். விளைவுகளைப் பற்றி கவலைப்படாமல் அப்பணி நடந்து விடுகிறது. ஈமான் கொண்டிருப்பதாக வாதம் செய்பவர்களைப் பற்றி அல்லாஹ் மூஃமினுடைய அடையாளம் நாளையைப் பற்றி கவனத்தில் கொள்வதாகும் என்று கூறுகிறான்.

முதல் கலீஃபத்துல் மஸீஹ் விளைவைப் பற்றியும் நாளையைப் பற்றியும் சிந்தனை எவ்வாறு உருவாகும் என்று விளக்கும் போது கூறினார்கள்: நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கு கவனிப்பவனாவான். பலர் இருக்கின்றனர். தமது கடமைகள், பணிகள், உடல் உழைப்பு போன்றவற்றில் சோம்பல் காட்டுகின்றனர். அவ்வாறு செய்தால் அதன் விளைவு ஹலால் ஆக இருப்பதில்லை. ஏனெனில் உலக விவகாரங்களில் ஒருவர் சோம்பல் காட்டுகிறார். கடமையைச் செய்வதில்லை என்றால் அவர் தனது நாளையை அழித்துக் கொள்கிறார். அதன் மூலம் அவர் பெற்ற உணவும் அவருக்கு ஆகுமானதாக இல்லை. ஏமாற்றி பெற் உணவாகும். எனவே, நாளையைப் பற்றி கவனமூட்டுகின்ற இந்த வசனம் மிகவும் பரந்த பொருள் கொண்டது. ஓர் உண்மையான மூஃமினின் ஒவ்வொரு அடியிலும் அவனது பாதத்தைப் பிடித்து பாவம் செய்வதிலிருந்து அவனை தடுத்து விடுகிறது.

எனவே, மூஃமின் நாளையைப் பற்றி கவனத்தில் கொள்வார் என்று கூறி சாதாரண வீட்டு விவகாரங்கள் தொடங்கி, சமூக, தொழில்ரீதியான, நாடு அளவிலான, உலகளாவிய அளவில், ஏன் எல்லா விவகாரங்களிலும் தக்வாவின் படி நடக்க வேண்டும் என்று கவனமூட்டி விட்டான். ஒருவர் தக்வாவின்படி நடக்கவில்லை எனில் ஒன்றை கவனத்தில் கொள்ளட்டும். இறைவனது பிடியில் அத்தகைய மனிதன் வருவார். மனிதன் உலக விவகாரங்களுடன் இதற்கு தொடர்பில்லை என்று கருதி விட வேண்டாம். மூஃமின் தக்வாவை மேற்கொள்ளுமாறு கட்டளை உள்ளது. எனவே, உலக மார்க்க காரியங்கள், அனைத்திலும் இறைவனத வழிகாட்டலுக்கேற்ப உலக நஷ்டங்களின் சோதனையிலிருந்து தப்பிக்க முயற்சி செய்ய வேண்டும் என்று நினைக்கிறான். பொருளாதார இலாபம் அடைய வேண்டும். அதற்காக எந்த வழிமுறைக் கடைபிடித்தாலும் சரி என்று நினைக்கிறான். ஏமாற்றி அதன் மூலம் பயன் பெறுகிற அனைத்து காரியங்களும் மார்க்கத்திலிருந்தும் ஈமானிலிருந்தும் தூர விலக்கக் கூடியவையாகும். வெளிப்படையான உலக விவகாரம் மார்க்க சோதனையாகி விடுகிறது. நான் ஏற்கனவே கூறியது போன்று சிறிது சிறிதாக அது மார்க்கம் மற்றும் இறைவனிடமிருந்து தூர இட்டுச் சென்று விடுகிறது. எனவே ஒரு மூஃமின் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். மார்க்க சோதனை உலக சோதனையை விட மிகவும் அதிகமாகும். அதன் விளைவால் உலகம் மறுமை இரண்டும் அழிந்து போய் விடுகின்றன.

நம்மில் ஒவ்வொருவரும் அத்தகைய சிந்தனையுடன் நமது கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றினால் அதற்காக முயன்றால் ஜமாஅத்தின் பொதுவான தக்வாவின் அளவுகோலாகவே உயர்ந்து விடும். தக்வாவின் அளவுகோல் உயர்ந்து விட்ட நிலை ஜமாஅத்திலும் கூட தன்னாலேயே தென்படும். தர்பிய்யத் துறைக்கும் பிரச்சனை இருக்காது. உமூரே ஆமா (பொது விவகாரத்துறை) அல்லது கஸாவுக்கும் பிரச்சனை இருக்காது. மற்ற துறைகளுக்கும் நினைவூட்டலுக்கான தேவை இருக்காது. எனவே நமது உள்ளங்களை எப்போதும் காலையும் மாலையும் அலசிப் பார்க்க வேண்டும். ஷய்த்தானுடைய தாக்குதலிலிருந்து நஃப்ஸை பாதுகாக்க பெரும் முயற்சி தேவையாகும்.

நாம் ஆய்வு செய்தால் எனது பணிகளை இறைவன் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற சிந்தனை நிறைய பேரிடம் இல்லை. இதன் விளைவு என்ன ஏற்படும்? இவை அனைத்திற்கும் காரணம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஷய்த்தான் மனித இரத்தத்துடன் சேர்ந்து அவனது உடலில் ஓடுகிறான். பெரும்பாலான நோய்கள் மனிதனுக்கு நஷ்டம் ஏற்படுத்தக் காரணம் ஏதாவது காரணத்தால் தொற்று(நோய்) ஆகி விடுகிறது என்றால் இரத்தத்தில் அது சுற்றிக் கொண்டிருக்கிறது. சிறிது சிறிதாக அதிகமாகி ஒரு கட்டத்தில் உடலில் அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தி விடுகிறது. மனிதனுக்கு ஆரம்பத்தில் தெரியாது. தன்னை இந்த நோய் தாக்குகிறது என்றும் இன்னும் சொல்வதாயின் அதிகமாக எச்சரிக்கையாக இருந்தும் மருத்துவரிடம் போனால் கூட ஆரம்ப கட்டத்தில் சில மருத்துவர்களும் கூட இவரது உள்ளே நோய் இருக்கிறது. அது இரத்தத்தில் சுற்றிக் கொண்டிருக்கிறது என்று தெரியாமல் போய் விடுகிறது. அந்த நோய் வரும்போது நான் ஏற்கனவே கூறியது போன்று ஒருவருக்கு மற்றவரிடமிருந்து நோய் தொற்றுகிறது. இன்றும்கூட பல நோய்கள் பரவியுள்ளன. ஆரம்பத்தில் அது தெரியாது. அது பற்றிய பிறகு தெரிய வருகிறது. ஆனால் மிகவும் ஆபத்தான விஷயம் இக்காலத்தில் ஆன்மீக நோயாகும். ஆன்மீக நோய்கள் தற்போது பெருமளவில் உள்ளன. ஆன்மீக நோயின் வைரஸ் எத்தகையதென்றால், மனிதனுக்கு தெரியவே செய்யாது. ஷய்த்தான் எவ்வாறு நமது இரத்தில் நுழைந்தான்; ஆன்மீக நோயை அதிகமாக்கத் தொடங்கினான் என்று தெரியாது. ஷய்த்தான் இரத்தத்தில் சுற்றுவதால் வருகிற ஆன்மீக நோய், உடல் நோயை விட ஆபத்தானது என்பதற்கு காரணம் உடல் நோயின்போது உடலில் தாக்கம் தென்படுகிறது. நான் நோயுற்றுள்ளேன் என்று மருத்துவரிடம் போகிறான். எனக்கு மருந்து தாருங்கள் என்று கேட்கிறான். ஆனால் ஆன்மீக நோய் ஆபத்தானது என்பதற்கு காரணம் மனிதன் அல்லாஹ்வை விட்டு தூர விலகும்போது ஷய்த்தானின் தாக்குதலின் கீழ் வருகிறான். அப்போதும் கூட சுயம் நோயாளி என்று உணர்வதில்லை. மாறாக, தன்னை ஆரோக்கியமானவன் என்று கருதுகிறான். அவனது நண்பர்கள், அனுதாபிகள் இவன் நோயாளி என்று உணர்ந்து அவனுக்கு புரிய வைக்கிறார்கள். தம்மை முற்றிலும் ஆரோக்கியமானவராக கருதுகிறார்.

எனவே ஒரு மூஃமினுக்கு நோய் தாக்குதல் தொடுக்கும் முன் எச்சரிக்கை நடவடிக்கையின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் ஏற்கனவே கூறியது போன்று இந்த சமுதாயத்தில் ஆன்மீக நோய் நிரந்தரமாக பெருமளவில் பரவியுள்ளன. எனவே நம்மை நாமே காப்பாற்றிக் கொள்வதற்கு நிரந்தர அமலும் தேவைப்படுகிறது. நிரந்தர சிகிச்சையும் தடுப்பு நடவடிக்கைகளும் தேவை. இதுவே ஓர் உண்மையான மூஃமினுக்கு தேவை. அதற்காக அவர் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும். எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். மூஃமின் இறையச்சத்திலிருந்து ஒருபோதும் வெறுமையாக இருக்கமாட்டார்; அவ்வாறு ஆகவும் கூடாது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பற்றி அறிவிப்பில் வருகிறது. அவர்கள் இரவில் எழும்போது மிகவும் பணிந்தும் உருகியும் துஆ செய்வார்கள். ஒருமுறை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அன்னாரின் அந்நிலையைக் கண்டு, அல்லாஹ் உங்களுக்கு எல்லாவற்றையும் மன்னித்து விட்டான். இவ்வளவு கஷ்டப்பட வேண்டிய தேவை என்ன? மிகவும் பயந்து ஏன் துஆ செய்கின்றீர்கள்? உங்களுக்காக இவ்வளவு பயப்பட வேண்டியது ஏன்? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறிய பதிலாவது நான் கூறியது போன்று மனிதனது இரத்தத்தில் ஷய்த்தான் இருக்கிறான் என்றபோதிலும் எனது ஷய்த்தான் முஸ்லிம் ஆகிவிட்டான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியிருந்தார்கள். அதாவது ஏதாவது ஆன்மீக நோய் என்னை தாக்குமா? என்ற கேள்விக்குக் கூட இடமில்லை. ஆனால் அன்னார் கூறினார்கள்: எனது ஈடேற்றமும் இறையருளால் தான் நிகழ வேண்டும். எனக்கும் அவன் முன் எப்போதும் குனிந்திருக்கும் தேவை உள்ளது. எனவே ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் இவ்வளவுக்கும் பிறகும் இந்த அளவுக்கு அச்சத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள் எனில் பிறகு எனக்கு ஒவ்வொரு வேளையிலும் எந்த நேரமும் நாளையைப் பற்றிய கவனம் வைக்க தேவையில்லை என்றும், பிறகு வேலை செய்து இறைவனது அருளைத் தேடத் தேவையில்லை என்றும் எவர் கூற முடியும்? எனவே எப்போதும் உஷாராக இருக்க வேண்டியது அவசியமாகும். எப்போதும் தக்வாவின் மீது நடந்தவாறு நமது பணிகளின் நிலைகளை ஆய்வு செய்வது அவசியமாகும். எப்போதும் அல்லாஹ்விடம் அவனது அருளைக் கேட்பது அவசியமாகும். எப்போதும் உள்ளத்தில் இந்த எண்ணத்தை கொள்வது அவசியமாகும். நான் எவ்வாறு எனது ஈமானை எப்படி பாதுகாப்பது என்று. அதன் பக்கம் நான் ஓதிய அடுத்த வசனத்தில் அல்லாஹ் கவனமூட்டியுள்ளான். இறைவனை மறந்து விட்டவர்களைப் போன்று ஆகிவிடாதீர்கள். பிறகு இறைவன் தன்னைத்தானே மறக்கச் செய்து விடுவான்.

நினைவில் கொள்ள வேண்டும். பொதுவான மனிதன் இறைவனை மூன்று வழிகளில் மறக்கிறான் அல்லது மூன்று வகை மக்கள் உலகில் தென்படுகின்றனர். ஒன்று, அவர்கள் இறைவனை விட்டும் விலகியுள்ளனர். இறை இருப்பை மறுப்பவர்கள் இறைவன் என்று ஒன்றுமில்லை என்று ஏளனமாக கூறுகின்றனர்.

இரண்டாவது பிரிவினர், இவர்களுக்கு எல்லா ஆற்றல்களும் கொண்ட இறைவன் மீது முழுமையான நம்பிக்கை இல்லை. அவன் முன்பு ஒருநாள் நிறுத்தப்படுவோம் என்றும், தமது செயல்களுக்குப் பதில் தர வேண்டும் என்றும் நம்பிக்கை இல்லை. இறைவன் இருக்கிறான் என்றும் நம்பிக்கை இருப்பதாக அவர்கள் கூறுபவர்களாக இருக்கின்றனர். அந்த இறைவனே உலகைப் படைத்தவன். அவனுக்கு கட்டுப்பட்டே ஓர் அமைப்பு உள்ளது என்று நம்புகின்றனர். ஆனாலும் அவனுடைய கூற்றுக்கு ஏற்ப செயலாற்றுவதில்லை.

மூன்றாவது பிரிவினர், உலக விவகாரங்களில் எந்த அளவுக்கு மூழ்கி விட்டனர் என்றால் அதிலேயே இறைவனை மறந்து விட்டனர். எப்போதாவது எண்ணம் வந்தால் தொழுவோம். துஆ செய்வோம். ஆனால் முறைப்படி எதுவுமே செய்வதில்லை. அல்லாஹ் ஒரு நம்பிக்கையாளருக்கு ஐந்து தொழுகைகளை கடமையாக்கியுள்ளான் என்பதில் கவனமில்லை. எவ்வாறிருப்பினும், எவர் இறைவனை மறந்து விடுவாரோ அவர் இறுதியில் நல்லொழுக்கத்தையும் இழந்து விடுவார் என்பது உறுதியாகும். ஆன்மீக வீழ்ச்சியும் ஏற்படுகிறது. இறுதியில் மனநிம்மதியும் போய் விடுகிறது. உலகப் பணிகளில் தான் இலாபம் இருக்கிறது என்பது இவர்களின் எண்ணமாகும். எனவே அதனை முதலில் செய்யுங்கள். இறைவனுக்குள்ள கடமை பிறகு செய்யலாம். ஏனெனில் உலக இலாபங்களுள் உலக சுகபோகங்கள் முதலில் தென்படுகின்றன. ஆனால் அல்லாஹ் கூறியது போன்று அத்தகைய மக்களுடன் இறைவன் எவ்வாறு நடந்து கொள்கிறான் என்றால் ஃபஅன்ஸாஹூம் அன்புஸஹூம் இறைவன் அவர்களை தாமே மறக்குமாறு செய்து விட்டான். அத்தகையோருக்கு மனநிம்மதி இருப்பதில்லை.

எனவே மூஃமின்களுக்கு அல்லாஹ் கூறுகிறான்: உண்மையான தக்வா உங்களிடம் இருக்கும் எனில் நீங்கள் மூஃமின்களாக இருந்தால் அல்லாஹ்வின் இருப்பின் மீது உறுதி இருந்தால் அவனது ஏகத்துவத்திலிருந்து நம்பிக்கையும் உறுதியும் இருந்தால் அல்லாஹ் கட்டளையிட்டுள்ள நிபந்தனைகளின்படி வாழ்க்கையைக் கழியுங்கள். அது என்னவெனில், ஒவ்வொரு பணியின் விளைவையும் கவனத்தில் கொள்ளுங்கள். அல்லாஹ் உங்கள் ஒவ்வொரு செயல்களையும் பார்க்கிறான் என்று உறுதி கொள்ளுங்கள். மனிதனுக்கு இந்த சிந்தனை இருக்கும் எனில் ஒவ்வொரு பணியின் தரமும் மாறி விடும். மனிதன் சுயமாக உணர்கிறான். இதனால் இறைவனது அருளும் அவருக்கு அதிகரிக்கிறது.

எனவே இங்கு அல்லாஹ் ஃபாஸிக் என்று கூறி ஈமான் கொண்டதாக வாதிப்பவர்களுக்கு தெளிவுபடுத்தி விட்டான். தக்வாவின்படி நடக்கவில்லை எனில் நாளையைப் பற்றி கவலைப்படவில்லை எனில் அல்லாஹ்வுடைய கட்டளையின்படி நடக்கவில்லை எனில் ஃபாஸிக்குகளில் சேர்க்கப்படுவீர்கள். ஃபாஸிக் என்றால் இறைவனால் நிலைநாட்டப்பட்ட வரம்புகளை முறிப்பவர். பாவங்களில் பீடிக்கப்பட்டவர். கட்டுப்படுவதிலிருந்து வெளியில் வந்தவர். உண்மையிலிருந்து விலகியவர். நாம் நம்மைப் பற்றி ஆய்வு செய்யவில்லை எனில் நமது பணிகளை இறைவன் கூறிய தரத்தில் வைக்க முயற்சி செய்யவில்லை எனில் அது மிகவும் பயப்பட வேண்டிய இடமாகும்.

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: பிரச்சனைகள் மனிதனுக்கு வருகின்றன. உண்ணல் குடித்தல் தேவைகள் உள்ளன. நண்பர்கள் உள்ளனர். பகைவர்களும் உள்ளனர். இந்த எல்லா நிலையிலும் ஓர் இறையச்சம் உடையவரின் சிறப்பு என்னவெனில் அவர் இறைவனை விட்டு வழிதவறி விடக்கூடாது என்று அவருக்கு கவனத்தில் இருக்கும். அதாவது இறைவனுக்கு முன்னுரிமை தருகிறார். நண்பர்கள் பயன்தரும் பொருள்களின் மீது நண்பரை நம்பினால் பிரச்சனை வரும் முன் அவர் உலகிலிருந்து போய் விடலாம் அல்லது வேறு ஏதாவது பிரச்சனையில் மாட்டி உங்களுக்கு பயன்பட முடியாமல் போகலாம். பிறகு நீதிபதியை நம்பினால் அவர் மாறிப் போய் விடுவதும் சாத்தியம். அவர் மூலம் பயன் கிடைக்க முடியாமல் போகலாம். அல்லது உறவினர்களை நம்பினால் அவர்கள் கஷ்ட வேளையில் உதவி தருவார்கள் என்று கருதினால் நமக்கு தேவை ஏற்படும் போது அவர்களிடமிருந்து பயன் பெற முடியாது தூரத்தில் அவர்கள் போய் விடலாம். எனவே ஒவ்வொரு விநாடியும் இறைவனிடமிருந்து தொடர்பை விட்டு விடக் கூடாது. வாழ்விலும் மரணத்திலும் நம்மிடமிருந்து அவன் பிரிந்து விடக் கூடாது. வாழ்வும் மரணமும் அவனுடனேயே இருக்க வேண்டும்.

எனவே இறைவன் கூறுகிறான்: இறைவனிடமிருந்து தொடர்பை முறித்துக் கொண்டவர்களைப் போன்று ஆகிவிட வேண்டாம். இதன் விளைவால் நீங்கள் துக்கங்களில் பாதுகாப்பாக இருக்க மாட்டீர்கள். சுகம் பெற மாட்டீர்கள். மாறாக இறைவன் புறமிருந்து இழிவுடன் கூடிய அடியே கிடைக்கும். அந்த இழிவு நண்பரின் தரப்பிலிருந்து வருவது கூட சாத்தியமே. அல்லாஹ்விடமிருந்து தொடர்பை துண்டித்துக் கொள்பவர் குழப்பவாதியும் தீயவரும் ஆவார். அவரிடம் உண்மையான நம்பிக்கை இருக்காது. அவர்கள் நம்பிக்கையில் பக்குவப்படாதவர்கள் என்பதல்ல. மாறாக ஸஃபகத் அலா கல்கில்லாஹ்வும் இருப்பதில்லை. அதாவது அல்லாஹ்வுடைய படைப்பினங்களிடம் பரிவு காட்டுவதில்லை. அவர்கள் இறைவனது கடமையையும் நிறைவேற்றுவதில்லை. மனிதனுடைய கடமையையும் நிறைவேற்றுவதில்லை. எனவே நம்மில் ஒவ்வொருவரும் நமது ஒவ்வொரு செயலையும் இறைவனது கட்டளைக்கேற்ப செய்ய முயற்சி செய்ய வேண்டும். நமது தற்காலிக பயன்களுக்குப் பதிலாக நாளையின் மீது கவனம் வைப்போமாக! அல்லாஹ் நமக்கு அதற்கான வாய்ப்பினை வழங்குவானாக!

From : Nazarath Nashr-o-Isha'ath, Qadian - 143 516, Distt Gurdaspur, Punjab.
Translated by **Muallim M. NIZAMUDEEN** for Tamil Desk